மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திருமதி. C. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி .

2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் ஆவணித் திங்கள் 08 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 78/2021-ல்**

**அசல் வழக்கு எண். 130/2015**

சண்முகம் .... மனுதாரர்/பவர் ஏஜெண்ட்

சத்தியநாராயணன் .../2 வது பிரதிவாதி

// எதிர்//

1. சிவகுமார்
2. சிவசண்முகம் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

// எதிர்//

1. ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிட்.,
   அதற்காக அதன் கிளை மேலாளர்.
2. சார்பதிவாளர், மன்னார்குடி.
3. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், திருவாரூர்..

..எதிர்மனுதாரர்கள்/1,3,4 பிரதிவாதிகள்

இம்மனு 09.08.2021 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.G. ஜீவானந்தம் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.T.P.S. மணிகண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில்

வழக்கறிஞர் திரு.M. இளஞ்சேரன் அவர்கள் முன்னிலையாகியும், 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு. V.K. கோபாலகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்ததின்பேரிலும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது 2 வது பிரதிவாதியின் முகவராக மனுதாரர் சண்முகம் என்பவர் அசல் வழக்கில் முன்னிலையாகி வழக்கை நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 3 விதி 1 மற்றும் 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் 2 ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவார். வாதியால் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து 2 ம் பிரதிவாதிக்கு சொந்தமானது ஆகும். அதனால் வழக்கு விபரத்தை மறைத்து ஏற்கனவே, 2 வது பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை பராமரிக்கவும், நீதின்ற வழக்குகளில் 2 வது பிரதிவாதிக்காக அவரது முகவர் முறையில் வழக்கில் முன்னிலையாகி வழக்கை நடத்தவும், 2 வது பிரிவாதியால் 15.05.2010 தேதியில் ஒரு பொது அதிகார முகவர் அவணம் எழுதிக்கொடுக்கப்பட்டு, அந்த ஆவணம் மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.231/2010 என்று பதிவு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. அந்த அசல் முகவர் ஆவணம் வழக்கு சொத்து தொடர்பான மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு

எண்.145/2009 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதியின் பொது முகவராக ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்/2 ம் பிரதிவாதியே நிரூபிக்கவேண்டும். 2 வது பிரதிவாதியான சத்தியநாராயணன் வழக்கின் குறுக்கு விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். 15.05.2010 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் பெற்றுள்ள சண்முகம் என்பவருக்கு வழக்குக்கு முன்பு ஏற்பட்ட நடவடிக்கைகள் தெரியாது. ஆகையால் அவரின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. வேண்டுமென்றே இந்த வழக்கை இழுத்தடிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், தாவா சொத்தானது 2 ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும், அதை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 2 வது பிரதிவாதியின் முகவர் என்ற முறையில் வழக்கில் முன்னிலையாகி வழக்கை நடத்த 2 வது பிரதிவாதியால் 15.05.2010 ம் தேதியில் பொது அதிகார முகவர் ஆவணம் பதிவு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது என்றும்,

அந்த ஆவணமானது மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.145/2009 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதாரரை 2ம் பிரதிவாதியின் முகவராக ஏற்றுக்கொண்டு அசல் வழக்கை நடத்த உத்தரவிடவேண்டும என்றும் வாதிட்டார்.

**5.** எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், 2ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், 15.05.2010 தேதியிட்ட பொது அதிகார முகவருக்கு வழக்குக்கு முன்பு ஏற்பட்ட நடவடிக்கை பற்றி தெரியாது என்றும், வழக்கினை வேண்டுமென்றே இழுத்தடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

6. **இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>பிரச்சனை :-</u>**

**1.** மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** அசல் வழக்கானது தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு 2 வது பிரதிவாதியால் கடன் ஏற்படுத்தி மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில். பதிவு செய்யப்பட்ட ஆவண எண். 2978/2012 நாள் 30.07.2012-ல் ஏற்பட்ட அடமான கடன் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** இம்மனுவினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது, வாதியால் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு வா.சா.2.ஐ பி.சா.2 தரப்பில் குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்தபோது, மனுதாரரரை அவரது பொது முகவராக ஏற்றுக்கொண்டு அசல் வழக்கை மேல் நடத்தவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அதிகார முகவர் பத்திரம் பெற்றுள்ள சண்முகம் என்பவருக்கு வழக்குக்கு முன்பு ஏற்பட்ட நடவடிக்கைகள் பற்றி எதுவும் தெரியாது என்றும், அவரின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றத்தை கருத்திற்கொள்கிறது. மேலும், இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பவர் பத்திரத்தை பரிசீலணை செய்யும் போது, அந்த பவர் பத்திரமானது வழக்கின் 2ம் பிரதிவாதியால் அவரது தந்தை சத்தியநாராயணன் என்பவருக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி சொத்தை நேரடியாக கவனிக்க முடியவில்லை என்று கூறும் சமயத்தில் அவர் சட்டப்படிக்கு வழக்கு விபரம் தெரிந்த நபருக்கு அதிகார பத்திரம் எழுதி கொடுக்க சட்டப்படி உரிமை உள்ளது. அதன் படி மனுதாரர் 2ம் பிரதிவாதியின் தந்தை ஆவார். இந்நிலையில் இந்த மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள அதிகார பத்திரத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்திற்கொண்டும் 1ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் அவரது தந்தை என்பதை கருத்திற்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்திற்கொண்டும், நீதியின் பால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என

இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்**, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 24.08.2021) அவையறியப்பகரப்பட்டது.

(S/d. C.Kalaivani.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**:-

**இரு தரப்பிலும்** : இல்லை

(S/d. C.Kalaivani.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.